# சமுதாய வலைத் தொடர்புகள் (Social net-works) மூலம் சுவிசேஷம் அறிவித்தல்


சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் W1b பாடத்தை வாசிக்கவும்

## 1. உங்கள் மந்தை தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சாட்சிகளாய் இருக்க உதவும்படி உங்கள் இருதயத்தையும் மனதையும் தேவ வார்த்தையால் ஆயத்தப்படுத்துக.


"அன்பான பரிசுத்த ஆவியானவரே! எங்கள் நண்பர்களுக்கு உயிர்தெழுந்த இரட்சகரான இயேசு கிறிஸ்துவை எடுத்துச் சொல்ல உமது வல்லமையைத் தாரும்."

இன்னொரு நகரத்திலும் கலாச்சாரத்திலும் ஒரு புதிய சபை எழும் அளவுக்கு என்ன நடந்தது என்பதை அப். 10 ல் **காண்க.**

- இந்த நிகழ்ச்சிக்காக மக்களை தேவன் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்த வேளையில் பேதுருவும் கொர்நேலியுவும் என்ன செய்து கொண்டிருந்தனர்?



- கொர்நேலியு ஜெபித்துக் கொண்டு இருந்த போது தேவ தூதன் என்ன செய்யக் கூறினான்?



- கொர்நேலியு அனுப்பிய வீரர்கள் யோப்பாவிற்கு வரு முன்னரே, புற ஜாதியார்களின் வீட்டிற்கு சென்று விலக்கப்பட்ட உணவுகள் உண்ண பேதுருவை தேவன் ஆயத்தப்படுத்தி விட்டார். பேதுரு தனது தரிசனத்தில் பார்த்த அதிர்ச்சி தரும் காட்சி என்ன?
- தேவன் தமது தரிசனத்தில் அசுத்தமான மிருகங்களையும் புசிக்குமாறு கூறியதால், எல்லா இன மக்களையும் மதிக்க வேண்டும் என்பதைப் பேதுரு புரிந்து கொண்டான். செசராவில் இருந்த கொர்நெலியுவின் வீட்டிற்கு பேதுருவோடு போனது யார்?
- செசராவுக்கு பேதுருவும் அவரது உடன் ஊழியரும் வந்த போது தங்களுக்காக கொர்நேலியுவின் வீட்டில் யார் காத்துக் கொண்டு இருப்பதைக் கண்டார்கள்?
- கொர்நேலியுவின் குடும்பத்துக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் இயேசுவைப் பற்றி பேதுரு கூறிய கடைசி விஷயம் என்ன?
- இயேசுவின் ஜீவன் தரும் உயிர்த்தெழுதலைப் பற்றி பேதுரு பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மேல் பரிசுத்த ஆவி இறங்கிற்று. பேதுருவும் அவரது உடன் வேலையாட்களும் தங்கள் விசுவாசத்தினையும் மனம் திரும்புதலையும் எவ்வாறு உறுதிப்படுத்தினர்?
- புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பின் பேதுரு எவ்வளவு காலம் தங்கினார்?
- இந்த படத்தில் இருக்கும் தவறு என்ன?

*பதில்: புதிய விசுவாசிகள் எளிதாகப் பின்பற்றும் வகையில் படத்தில் உள்ள சுவிசேஷகர் இயேசுவைப் பற்றி கூறவில்லை. நற்செய்தி ஒருவரிடம் இருந்து ஒருவருக்கு பாய்ந்து போகுமாறு அவர் அனுமதிக்கவில்லை. எல்லா விசுவாசிகளும் பயன்படுத்தும் வகையில் பேதுரு போன்ற சுவிசேஷகர்கள்*

*பிரசங்கித்த போது நற்செய்தி பலருக்கு பரவியது. இயேசுவைப் பற்றி கேட்க வருமாறு மக்களை கவருவதற்காக அவ்வப்போது சிறப்பான நிகழ்ச்சிகளில் நல்ல இசையைத் தருவது நல்லதுதான். ஆனால் இசைமட்டுமே சுவிசேஷத்தில் முக்கிய அம்சமாகப் போய் விடக் கூடாது.*



நான் சுவிசேஷம் கூற விரும்புகிறேன். ஆனால் என்னால் முடியாது. ஏனெனில், என்னிடம் கிட்டாரோ, இந்த பெரிய சுவிசேஷகனைப் போன்று பாடவோ முடியாது.

## 2. வரும் வாரத்து நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

- இயேசுவைப் பற்றி பகிர்ந்து கொள்ள விசுவாசிகள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீட்டுக்கு செல்லுவதை திட்டமிடவும்.
- எல்லோரும் எளிதாகப் பின்பற்றும் வகையில் சாட்சியளிக்கும் வழிகளை சிந்திக்க உதவுமாறு தேவனை வேண்டிக் கொள்ளுங்கள்.
- இயேசுவைப் பற்றி கேள்விப்படாத இடங்களுக்கு ஊழியர்களை அனுப்பத் திட்டமிடுக. நற் செய்தியைக் கேட்டு நண்பர்களிடத்திலும் பகிர்ந்து கொள்ள தேவன் ஆயத்தம் செய்த கொர்நேலியு போன்ற மக்களை அவர்கள் தேடிக் காண வேண்டும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

சூழ்நிலைக்கும் அந்தந்தப் பகுதி சம்பிரதாயங்களுக்கும் ஏற்ற நடவடிக்கைகளை தெரிந்து கொள்க. உதாரணமாக -

அப். 10 ல் வரும் பேதுருவும் கொர்நேலியுவும் பற்றிய **கதையைச்** சொல்லுக அல்லது நடித்துக் காட்டுக.


- பகுதி 1 ல் நீங்கள் அறிந்து கொண்டதைப் பற்றி **கேள்விகள்** கேட்கவும். அப். 10 ல் நீங்கள் அறிந்து கொண்ட உண்மைகளைப் பற்றிப் பேச விசுவாசிகளுக்கு உதவவும். பேச வேண்டிய விஷயம்.
- சுவிசேஷம் அறிவித்தல் ஜெபத்தோடு ஆரம்பிக்கிறது.
- சுவிசேஷத்தைக் கேட்பவர்களையும், அதைக் கொண்டு செல்பவர்களையும் தேவனே ஆயத்தம் செய்கிறார். இதனால் இருவருமே பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தொடர்பு கொள்ள முடியும்.
- இருண்டு அல்லது மூன்று கிறிஸ்தவர்கள் சேர்ந்து செயல்பட வேண்டும். இயேசுவும் அப்போஸ்தலர்களும் ஒருபோதும் தனியாக செயலாற்ற வில்லை.
- குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் என்ற வலைத் தொடர்பு வழியாகவே நற்செய்தி சுதந்திரமாகச் செல்ல முடியும்.
- இந்த வகையில் நற்செய்தி சுலபமாகச் செல்ல வேண்டும் என்றால் புதிய விசுவாசிகள் எளிதாகப் பின்பற்றக் கூடிய முறைகளை பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, எல்லோரும் செய்யக்கூடிய வகையில், பேதுரு இயேசுவைப் பற்றி, அவரது கிருபாதார பலி பற்றி, ஜீவன் அளிக்கும் உயிர்த்தெழுதல் பற்றி மிக எளிதாகப் பேசினார்.
- புதிய விசுவாசிகளின் விசுவாசத்தையும் மனம்திரும்புதலையும் ஞானஸ்நானத்தின் மூலமாக உறுதிப்படுத்தவும்.
- புதிய விசுவாசிகளுடன் சில காலம் தங்கி அவர்களை இயேசுவுக்குக் கீழ்ப்படியுமாறு போதிக்கவும். அவர்களது புதிய விசுவாசத்தில் அவர்களைத் திடப்படுத்தவும். அந்த சமுதாயத்தில் சபை எதுவும் இல்லை எனில் ஒன்றை ஆரம்பிக்கவும்.

கிறிஸ்துவுக்குள் தங்கள் புதிய வாழ்க்கையை இன்னும் அறிந்து கொள்ளாத நண்பர்கள் மற்றும் உறவினர்களின் **பெயர் சொல்லி ஜெபிக்கவும்.**

சமீபத்தில் கிறிஸ்துவை விசுவாசித்த மற்றும் சொந்தமடைந்த மக்களுக்காக தேவனைத் துதிக்கவும். சாட்சிகள் கூறவும்.

**மனனம் செய்க:** அப். 16:31.

**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்ததை சபைக்கு வழங்குமாறு கேட்கவும்.



இந்த வாரத்தில் நீங்கள் திட்டமிட்ட சுவிசேஷத்தை அறிவிக்கவும். விசுவாசிகள் யாருக்கு தாங்கள் சாட்சி அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்க உதவவும். இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுவாகக் கூடி தங்கள் திட்டங்களை ஜெபித்து உறுதிப்படுத்துமாறு விசுவாசிகளை வேண்டிக் கொள்ளுங்கள்.

யூதரல்லாதவர்களோடு விருந்துண்ணுமாறு தேவன் பேதுருவோடு கூறியதையும் எல்லா ஜாதி மக்களையும் பரலோகத்தில் இயேசு கலியாண விருந்தில் சேர்த்துக் கொண்டதையும் விவரித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப்படுத்துக. அந்த விருந்தின் ஒரு முன்வடிவமே கர்த்தரின் பந்தி. நாயகர் கிறிஸ்துவே. அவரை நாம் முக முகமாய்ப் பார்ப்போம்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net